நயினையின் சிவசக்தி மூர்த்தங்களும் ஈழத்தின் ஞானதேசிகர்களும்



அமரர்

திருமதி. முத்தையா சிவக்கொழுந்து

அவர்களின் நினைவாகப் பதிப்பிக்கப்பட்டது

சிவமயம்



நயினாதீவைச் சேர்ந்த

அமரர்

திருமதி. முத்தையா சிவக்கொழுந்து

அவர்களின்

நிறைவுற்றதைக் குறித்த

நினைவு மலர்

03.02.2007

PUBLIC LIBRARY
JAFFNA

சமர்ப்பணம்

தன்சுக மிழந்தான் தாய்மையின் நினைவால்
அன்பினி லெம்மை அனுதினம் சுமந்தாள்
பண்பினி லுயர்ந்தாள் பாசத்திற் கிணையிலா
கண்மணி யாகக் கருதி வளர்ந்திட்ட
விண்ணுல கிருக்கும் சிவப்பெருங் கொழுந்து
நண்ணிய திருவடி சமர்ப்பணம் செய்தோம்.

நயினாதீவு - 07
18/4, சீனியர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்
க.சின்னத்தம்பி முத்தையா
குடும்பத்தினர்.
(கணக்காளர், ஈஸ்வரபகவான் கம்பனி)

நயினாதீவு செம்மணத்தம்புலம் வீரகத்தி விநாயகர் மூலஸ்தானம்

நயினை மலையிற்புலம் ஐயனார்
பதினெட்டாம் படி திருவிளக்குப் பூஜை

நயினாதீவு செம்மணத்தம்புலம் வீரகத்தி விநாயகர் மூலஸ்தானம்

நயினை மலையிற்புல பூரணை புட்கலை சமேத
அரிகரபுத்திர ஐயனார்



கயிலைக் காட்சியில் ஸ்ரீ நாகபூஷணி அம்மன்

நயினை மலையிற்புலம் ஐயனார் ஆலய மலையின்
நாயனார் மூலஸ்தானம்

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் எழுந்தருளி

நயினை மலையிற்புலம் மலையின் ஐயனார்

நயினை மலையிற்புலம் கேட்ட வரம் அருளும் ஐயனார்

நயினாதீவு காட்டுக்கந்த சுவாமியார் ஆலய வள்ளி ம
சமேத கந்தசுவாமியார்

நயினாதீவு இரட்டக்காலி முருகன் கோவில் வெளித்தோற்றம்

நயினாதீவு காட்டுக்கந்த சுவாமியார் ஆலய வள்ளி தெய்வானை சமேத கந்தசுவாமியார்



நயினாதீவு இரட்டக்காலி முருகன் எருந்தருளி

நயினாதீவு தில்லைவெளி பிடாரியம்பாள் மூலஸ்தானமும்

நயினாதீவு தில்லைவெளி பிடாரியம்பாள் மூலஸ்தானம்

நயினாதீவு தில்லைவெளி பிடாரியம்பாள் மூலஸ்தானம்

நயினாதீவு பெருங்குளம் மதுரை மீனாட்சி அம்பாள்



தவத்திரு மார்க்கண்டு சுவாமிகள்

நயினாதீவு பெருங்குளம் மதுரை மீனாட்சி அம்மன்

தவத்திரு சிவயோக சுவாமிகள்

நயினாதீவு தம்பகைப்பதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் சமேத வீரபத்திர சுவாமிகள்



தவத்திரு சிவயோக சுவாமிகள்

வீரபத்திரர் ஆலய புறத்தோற்றம்



நல்லூர் தேரடி செல்லப்பா சுவாமிகள்



தவத்திரு செல்லத்துரை சுவாமிகள் இந்து ஆரம்ப பாடசாலை
ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் ஆசி வழங்குதல்

ஸ்ரீ கனகரத்தினம் சுவாமிகள்

தவத்திரு செல்லத்துரை சுவாமிகளும் அவரது அணுக்கத் தொண்டரும்
யாழ் இந்து ஆரம்ப பாடசாலையில் அருணாசலத்துதி பாடுதல்

சிவஞானி சின்னக்குட்டி அம்பாள்

கொழும்பு மட்டக்களப்பு இந்தியா இராமகிருஷ்ண மட
சுவாமிகளுடன் செல்லத்துரை சுவாமிகள்

கைதடி சுப்பிரமணிய சுவாமிகள்



யாழ்ப்பாணம் கடையிற் சுவாமிகள்

பாரதியின் ஞான குரு யாழ்ப்பாணத்து ஆறுமுக சுவாமிகள்



ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகள்

மகாதேவா சுவாமிகளுடன் சிவனடியார்கள்

ஸ்ரீமத் நமசிவாய சுவாமிகள்

தவத்திரு கிளிநொச்சி வடிவேற் சுவாமிகள்

ஸ்ரீமத் அருணாசலம் சுவாமிகள்

திருகோணமலை சிவரெத்தினம் சுவாமிகள்

ஸ்ரீமத் கனகரத்தினம் சுவாமிகள்

ஸ்ரீமத் மகாதேவா சுவாமிகள்

நல்லூர் சடையம்மா சுவாமிகள்



குரு பாபா சுவாமிகள்

கைதடி சச்சிதானந்த சுவாமிகள்



இணுவில் சின்னத்துரை சுவாமிகள்

சந்நிதி மௌனகுரு சிவஶ்ரீ முருகுப்பிள்ளை சுவாமிகள்
(கடவுள் சுவாமிகள்)

குடையிற்சுவாமிகள் (கந்தையா சுவாமிகள்)



நயினை திண்ணைப்பள்ளிக்கூட ஆசான் பல்கலை வித்தகன்
சின்னத்தம்பி பெரியதம்பி (மலையின் ஐயனார் ஆலய ஸ்தாபகர்)

பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள்



கொழும்பு ஆண்டவன் தாளையான் பாபா



புங்குடுதீவு திருப்புகழ் சுவாமிகள்

நயினாதீவு கணபதிப்பிள்ளை சுவாமிகள் (அணல் சுவாமிகள்)

நயினாதீவு ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார் சுவாமிகள்

இல்லறஞானி ச. நா. கந்தைப்பெரியஉபாத்தியாயர் அவர்கள்

தோற்றம்
14.04.1927

மறைவு
06.01.2007

அமரர்

திருமதி. முத்தையா சிவக்கொழுந்து

அவர்கள்

திதி வெண்பா

சீர்வியவ மார்கழி யிருபத் திரண்டுரா
நேரபரத்து சதுர்த்தி தனில் - பேர்பெருகு
முத்தையா சிவக்கொழுந்து நற்குடிப்பெண் நாகம்மை
சொத்தானா ளெல்லாம் துறந்து.

திருச்சிற்றம்பலம்

விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து

பஞ்சபுராணம்

தேவாரம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

விண்ணுற வடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை யொன்று மில்லையாம்
பண்ணிய உலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே.

திருவாசகம்

போற்றியோ நமசி வாய புயங்களே மயங்குகின்றேன்
போற்றியோ நமசி வாய புகலிடம் பிறிதொன்றில்லை
போற்றியோ நமசி வாய புறமெனைப் போக்கல் கண்டாய்
போற்றியோ நமசி வாய சய சய போற்றி போற்றி.

திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயா நீ உலாப் போந்த வன்றுமுத லின்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ வருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

திருப்பல்லாண்டு

சீருந்திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும்பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊருமுலகுங் கழற உளறியுமை மணவாளனுக் காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

பெரியபுராணம்

உலகெலா முணர்ந்து தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகின் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகி
பிறவாகித் திரமான பெரு வாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்மப் பெருமாளே.

நயினை நாகேஸ்வரி அம்பாள் துதி

கற்பகக் கன்றைக் கடம்பனைத்
தந்த கனகவரை
அற்புத மோன அருளாழி
ஞான அமிர்தவல்லி
தற்பரை வாமம் தழைத்தே
சரம சராநிதரு
நற்பதியே எனைப் பெற்ற
சதானந்த நாகம்மையே.

ஆனந்தவல்லி அகிலாண்ட நாயகி அம்பிகையே
மோனந்தரு முந்திவித்தே மயக்கமுனைப் பறுத்து
ஈனந்தரு வினைளய்யா தொழித்து யமனணுகா
ஞானசுந்தர உமையே நயினாநகர்நாகம் மையே.

(முகிளைச் சுவாமியார்)

வாழ்த்து

வைய நீடுக மாமழை மன்னுக
மெய்வி ரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தாந்தழைத் தோங்குக
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே.

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

நற்சிந்தனை

எங்கள் குருநாதன்

என்னையெனக் கறிவித்தா னெங்கள்குரு நாதன்
இணையடியென் தலைவைத்தா னெங்கள்குரு நாதன்
அன்னைபிதாக் குருவான னெங்கள்குரு நாதன்
அவனியெல்லா மாளவைத்தா னெங்கள்குரு நாதன்
முன்னைவினை நீங்கிவிட்டா னெங்கள்குரு நாதன்
மூவருக்கு மறியாவொண்ணா னெங்கள்குருநாதன்
நன்மைதீமை யறியாதா னெங்கள்குரு நாதன்
நான்தானாய் விளங்குகின்றா னெங்கள்குரு நாதன்

தேகம் நீ யல்லவென்றான் னெங்கள்குரு நாதன்
சித்தத்திற் றிகழுகின்றா னெங்கள்குரு நாதன்
மோகத்தை முனியென்றா னெங்கள்குரு நாதன்
முத்திக்கு வித்தென்றா னெங்கள்குரு நாதன்
வேகத்தைக் கெடுத்தாண்டா னெங்கள்குரு நாதன்
விண்ணும் மண்ணும் மாகிநின்றா னெங்கள்குரு நாதன்
தாகத்தை யாக்கிவிட்டா னெங்கள்குரு நாதன்
சத்தியத்தைக் காணவைத்தா னெங்கள்குரு நாதன்

வாசியோகந் தேரென்றா னெங்கள்குரு நாதன்
வகாரநிலை அறியென்றா னெங்கள்குரு நாதன்
காசிதேசம் போவென்றா னெங்கள்குரு நாதன்
கங்குல்பக வில்லையென்றா னெங்கள்குரு நாதன்
நாசிநுனி நோகென்றான் னெங்கள்குரு நாதன்
நடனந்தெரியுமென்றா னெங்கள்குரு நாதன்

மாசிலோசை கேட்குமென்றா னெங்கள்குரு நாதன்
மற்றுப்பற்றை நீக்கென்றா னெங்கள்குரு நாதன்

இருவழியை அடையென்றா னெங்கள்குரு நாதன்
எல்லாம் விளங்குமென்றா னெங்கள்குரு நாதன்
கருவழியைக் கடவென்றா னெங்கள்குரு நாதன்
கட்டுப்படும் மனமென்றா னெங்கள்குரு நாதன்
ஒருவருமு றியாரென்றா னெங்கள்குரு நாதன்
ஓங்கார வழியென்றா னெங்கள்குரு நாதன்
நிருமலனா யிருவென்றா னெங்கள்குரு நாதன்
நீயேநா னென்றுசொன்னா னெங்கள்குரு நாதன்.

திக்குத் திகாந்தமெல்லா மெங்கள்குரு நாதன்
சித்தத்துள் நிற்கவைத்தா னெங்கள்குரு நாதன்
பக்குவமாய்ப் பேணென்றா னெங்கள்குரு நாதன்
பார்ப்பதெல்லாம் நீயென்றா னெங்கள்குரு நாதன்
அக்குமணி யணியென்றா னெங்கள்குரு நாதன்
அஞ்செழுத்தை ஓதென்றா னெங்கள்குரு நாதன்
நெக்குநெக் குருகென்றா னெங்கள்குரு நாதன்
நித்தியன்நீ யென்றுசொன்னா னெங்கள்குரு நாதன்.

தேடாமல் தேடென்றா னெங்கள்குரு நாதன்
சீவன் சிவனென்றா னெங்கள்குரு நாதன்
நாடாமல் நாடென்றா னெங்கள்குரு நாதன்
நல்லவழி தோன்றுமென்றா னெங்கள்குரு நாதன்
பாடாமற் பாடென்றா னெங்கள்குரு நாதன்
பத்தரினஞ் சேரென்றா னெங்கள்குரு நாதன்

வாடாமல் வழிபடென்றா னெங்கள்குரு நாதன்
வையகத்தில் வாழென்றா னெங்கள்குரு நாதன்.

தித்திக்குமொருமொழியா லெங்கள்குரு நாதன்
சின்மயத்தைக காணவைத்தா னெங்கள்குரு நாதன்
எத்திக்கு மாகிநின்றா னெங்கள்குரு நாதன்
எல்லாம்நீ யென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
வித்தின்றி நாறுசெய்வா னெங்கள்குரு நாதன்
விண்ணவரு மறியவொண்ணா னெங்கள்குரு நாதன்
தத்துவா தீதனானா னெங்கள்குரு நாதன்
சகலசம் பத்துந்தந்தா னெங்கள்குரு நாதன்

ஆதியந்தம் மில்லையென்றா னெங்கள்குரு நாதன்
அதுவேநீ யெனுறுரைத்தா னெங்கள்குரு நாதன்
சோதிமய மென்றுசொன்னா னெங்கள்குரு நாதன்
சுட்டிறந்து நில்லென்றா னெங்கள்குரு நாதன்
சாதி சமயமில்லா னெங்கள்குரு நாதன்
தானாய் விளங்குகின்றா னெங்கள்குரு நாதன்
வாதியருங் காணவொண்ணா னெங்கள்குரு நாதன்
வாக்கிறந்த இன்பந்தந்ததா னெங்கள்குரு நாதன்.

முச்சந்திக் குப்பையிலே எங்கள்குரு நாதன்
முடக்கிக் கிடந்திடென்றா னெங்கள்குரு நாதன்
அச்சமொடு கோபமில்லா னெங்கள்குரு நாதன்
ஆவணத்தை நீக்கிவிட்டா னெங்கள்குரு நாதன்
பச்சைப் புரவியிலே எங்கள்குரு நாதன்
பாங்காக ஏறென்றா னெங்கள்குரு நாதன்

தச்சன்கட்டா வீட்டிலே எங்கள்குரு நாதன்
தாவுபரி கட்டென்றா னெங்கள்குரு நாதன்.

நாமேநா மென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
நமக்குக்குறை வில்லையென்றா னெங்கள்குரு நாதன்
போமேபோம் வினையென்றா னெங்கள்குரு நாதன்
போக்குவர வில்லையென்றா னெங்கள்குரு நாதன்
தாமேதா மென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
சங்கற்ப மில்லையென்றா னெங்கள்குரு நாதன்
ஓமென் றுறுதிதந்தா னெங்கள்குரு நாதன்
ஊமையெழுத் தறியென்றா னெங்கள்குரு நாதன்.

போற்றித்திருத்தாண்டகம்

[திருமூலட்டானம்]

கற்றவர்க ளுண்ணுங் கனியே போற்றி
கழலடைந்தார் செல்லும் கதியே போற்றி
அற்றவர்கட் காரமுத மானாய் போற்றி
அல்லலுறு தடியேனை ஆண்டாய் போற்றி
மற்றொருவ ரொப்பில்லா மைந்தா போற்றி
வானவர்கள் போற்றும் மருந்தே போற்றி
செற்றவர்தம் புரமெரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

வங்கமலி கடல்நஞ்சமுண்டாய் போற்றி
மதயானை யீருரிவை போர்த்தாய் போற்றி
கொங்கலரும் நறுங்கொன்றைத் தாராய் போற்றி
கொல்புலித்தோ லாடைக் குழகா போற்றி
அங்கணனே அமரர்கள்தம் இறைவா போற்றி
ஆலமர நீழலறஞ் சொன்னாய் போற்றி
செங்கனகத் தனிக்குன்றே சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

மலையான் மடந்தை மணாளா போற்றி
மழவிடையாய் நின்பாதம் போற்றி போற்றி
நிலையாக என்னெஞ்சில் நின்றாய் போற்றி
நெற்றிமேல் ஒற்றைக்கண் ணுடையாய் போற்றி
இலையார்ந்த மூவிலைவே லேந்தீ போற்றி
ஏழ்கடலும் ஏழ்பொழிலும் மானாய் போற்றி
சிலையாலன் றெயிலெரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

பொன்னிய்லும் மேனியனே போற்றி போற்றி
பூதப் படையுடையாய் போற்றி போற்றி
மன்னியசீர் மறைநான்கு மானாய் போற்றி
மறியேந்து கையானே போற்றி போற்றி
உன்னுமவர்க் குண்மையனே போற்றி போற்றி
உலகுக்கொருவனே போற்றி போற்றி
சென்னிமிசை வெண்பிறையாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

நஞ்சுடைய கண்டனே போற்றி போற்றி
நற்றவனே நின்பாதம் போற்றி போற்றி
வெஞ்சுடரோன் பல்லிறுத்த வேந்தே போற்றி
வெண்மதியங் கண்ணி விகிர்தா போற்றி
துஞ்சிருளி லாட லுகந்தாய் போற்றி
தூநீறு மெய்க்கணிந்த சோதீ போற்றி
செஞ்சடையாய் நின்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி
அங்கமலத் தயனோடு மாலுங்க காணா
அனலுருவா நின்பாதம் போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

வம்புலவு கொன்றைச் சடையாய் போற்றி
வான்பிறையும் வாளரவும் வைத்தாய் போற்றி
கொம்பனைய நுண்ணிடையாள் கூறா போற்றி
குரைகழலாற் கூற்றுதைத்த கோவே போற்றி

நம்புமவர்க் கரும்பொருளே போற்றி போற்றி
நால்வேதம் ஆறங்க மானாய் போற்றி
செம்பொனே மரகதமே மணியே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

உள்ளமா யுள்ளத்தே நின்றாய் போற்றி
உகப்பார் மனத்தொன்றும் நீங்காய் போற்றி
வள்ளலே போற்றி மணாளா போற்றி
வானவர்க்கோன் தோள்துணித்த மைந்தா போற்றி
வெள்ளையே றேறும் விகிர்தா போற்றி
மேலோர்க்கும் மேலோர்க்கும் மேலாய் போற்றி
தெள்ளுநீர்க் கங்கைச் சடையாய் போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

பூவார்ந்த சென்னிப் புனிதா போற்றி
புத்தேளிர் போற்றும் பொருளே போற்றி
தேவார்ந்த தேவர்க்கும் தேவே போற்றி
திருமாலுக் காழி யளித்தாய் போற்றி
சாவாமே காத்தென்னை யாண்டாய் போற்றி
சங்கொத்த நீற்றெஞ் சதுரா போற்றி
சேவார்ந்த வெல்கொடியாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

பிரமன்தன் சிரமரிந்த பெரியோய் போற்றி
பெண்ணுருவோ டாணுருவாய் நின்றாய் போற்றி
கரநான்கும் முக்கண்ணும் உடையாய போற்றி
காதலிப்பார்க் காற்ற எளியாய் போற்றி
அருமந்த தேவர்க்கரசே போற்றி
யன்றரக்கன் ஐஞ்ஞான்கு தோளுந் தாளுஞ்
சிரநெரித்த சேவடியாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

போற்றித் திருத்தாண்டகம்

[திருக்கயிலாயம்]

திருச்சிற்றம்பலம்

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்க நால்வேதம் ஆனாய் போற்றி
காற்றாகி எங்குங் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி! 1

பிச்சாடல் பேயோ டுகந்தாய் போற்றி
பிறவி அறுக்கும் பிரானே போற்றி
வைச்சாடல் நன்று மகிழ்ந்தாய் போற்றி
மருவியென் சிந்தைபுகுந்தாய் போற்றி
பொய்ச்சார் புரமூன்றும் எய்தாய் போற்றி
போகாதென் சிந்ததை புகுந்தாய் போற்றி
கச்சாக நாகம் அசைத்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி! 2

மருவார் புரமூன்றும் எய்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
உருவாகி என்னைப் படைத்தாய் போற்றி
உள்ளாவி வாங்கி யொளித்தாய் போற்றி
திருவாகி நின்ற திறமே போற்றி
தேசம் பரவப் படவாய் போற்றி
கருவாகி யோடும் முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி! 3

வானத்தார் போற்றும் மருந்தே போற்றி
வந்தென்றன் சிந்தை புகுந்தாய் போற்றி
ஊனத்தை நீக்கும் உடலே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி
தேவர்க்குந் தேவனாய் நின்றாய் போற்றி
கானத்தீ ஆடல் உகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி! 4

ஊராகி நின்ற உலகே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
பேராகி எங்கும் பரந்தாய் போற்றி
பெயராதென் சிந்தை புகுந்தாய் போற்றி
நீராவி ஆன நிழலே போற்றி
நேர்வார் ஒருவரையும் இல்லாய் போற்றி
காராகி நின்ற முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி! 5

சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி
தேவ ரறியாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்ந்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
பல்லுயிராய்ப் பார்தோறு நின்றாய் போற்றி
பற்றி யுலகை விடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி! 6

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி

எண்ணும் எழுத்துஞ் சொல் லானாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனுந்தீ யானாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி! 7

இமையா துயிரா திருந்தராய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
உமைபாக மாகத் தணைத்தாய் போற்றி
ஊழி யேழான வொருவா போற்றி
அமையா வருநஞ்ச ஆர்ந்தாய் போற்றி
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
கமையாகி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி! 8

மூவாய் பிறவாய் இறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர்தொழுந் தேவே போற்றி
சென்றேறி எங்கும் பரந்தாய் போற்றி
ஆவா அடியேனுக் கெல்லாம் போற்றி
அல்லல் நலிய அலந்தேன் போற்றி
காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி! 9

நெடிய விசும்பொடு கண்ணே போற்றி
நீள அகலம் உடையாய் போற்றி
அடியு முடியும் இகலிப் போற்றி
அங்கொன் றறியாமை நின்றாய் போற்றி

கொடியவன் கூற்றம் உதைத்தாய் போற்றி
கோயிலா என்சிந்தை கொண்டாய் போற்றி
கடிய வுருமொடு மின்னே பேறறி
கயிலை மலையானே போற்றி போற்றி! 10

உண்ணா துறங்கா திருந்தாய் போற்றி
ஓதாதே வேத முணர்ந்தாய் போற்றி
எண்ணா இலங்கைக்கோன் தன்னைப் போற்றி
இறைவிரலால் வைத்துகந்த ஈசா போற்றி
பண்ணார் இசையின்சொற் கேட்டாய் போற்றி
பண்டேஎன் சிந்தை புகுந்தாய் போற்றி
கண்ணா யுலகுக்கு நின்றாய் போற்றி
கயிலை மலையானே போறற் போற்றி! 11

அப்பர் திருமுறை - 6

திருச்சிற்றம்பலம்

பொறையுடைய பூமிநீர் ஆனாய் போற்றி
பூதப் படையாள் புனிதா போற்றி
நிறையுடைய நெஞ்சின் இடையாய் போற்றி
நீங்காதென் உள்ளத் திருந்தாய் போற்றி
மறையுடைய வேதம் விரித்தாய் போற்றி
வானோர் வணங்கப் படுவாய் போற்றி
கறையுடைய கண்டம் உடையாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி! 1

முன்பாகி நின்ற முதலே போற்றி
மூவாத மேனிமுக் கண்ணா போற்றி
அன்பாகி நின்றார் கணியாய் போற்றி
ஆறேறு சென்னிச் சடையாய் போற்றி

என்பாக எங்கும் அணிந்தாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
கண்பாவி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி! 2

மாலை யெழுந்த மதியே போற்றி
மன்னியென் சிந்தை இருந்தாய் போற்றி
மேலை வினைகள் அறப்பாய் போற்றி
மேலாடு திங்கள் முடியாய் போற்றி
ஆலைக் கரும்பின் தெளிவே போற்றி
அடியார்கட் கதிரே போற்றி
காலை முளைத்த கதிரே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி! 3

உடலின் வினைகள் அறுப்பாய் போற்றி
ஒள்ளெரி வீசும் பிரானே போற்றி
படருஞ் சடையின் மதியாய் போற்றி
பல்கணக் கூத்தப் பிரானே போற்றி
சுடரில் திகழ்கின்ற சோதீ போற்றி
தோன்றியென் னுள்ளத் திருந்தாய் போற்றி
கடலின் ஒளியாய முத்தே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி! 4

மைசேர்ந்த கண்டம் உடையாய் போற்றி
மாலுக்கும் ஓராழி ஈந்தாய் போற்றி
பொய்சேர்ந்த சிந்தை புகாதாய் போற்றி
போகாதென் னுள்ளத் திருந்தாய் போற்றி
மெய்சேரப் பால் வெண்ணீறாடீ போற்றி
மிக்கார்கள் ஏத்தும் விளக்கே போற்றி
கைசேர் அனலேந்தி ஆடீ போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 5

ஆறேறு சென்னி முடியாய் போற்றி
அடியார்கட் காரமுதாய் நின்றாய் போற்றி
நீறேறு மேனி யுடையாய் போற்றி
நீங்காதென் னுள்ளத் திருந்தாய் போற்றி
கூறேறு மங்கை மழுவா போற்றி
கொள்ளுங் கிழமையேழ் ஆனாய் போற்றி
காறேறு கண்ட மிடற்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி! 6

அண்டமே ழன்று கடந்தாய் போற்றி
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
பண்டை வினைகள் அறுப்பாய் போற்றி
பாரோர் விண்ணேத்ப் படுவாய் போற்றி
தொண்டர் பரவும் இடத்தாய் போற்றி
தொழில்நோக்கி ஆளுஞ் சுடரே போற்றி
கண்டங் கறுக்கவும் வல்லாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி! 7

பெருகி அலைக்கின்ற ஆறே போற்றி
பேரா நோய்பேர விடுப்பாய் போற்றி
உருகி நினைவார்தம் உள்ளாய் போற்றி
ஊனந் தவிர்க்கும் பிரானே போற்றி
அருகி மிளிர்கின்ற பொன்னே போற்றி
யாரும் இகழப் படாதாய் போற்றிங
கருகிப் பொழிந்தோடும் நீரே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி! 8

செய்ய மலர்மேலான் கண்ணன் போற்றித்
தேடியுணராமை நின்றாய் போற்றி

பொய்யா நஞ்சுண்ட பொறையே போற்றி
பொருளாக என்னை ஆட் கொண்டாய் போற்றி
மெய்யாக ஆனஞ் சுகந்தாய் போற்றி
மிக்கார்க ளேத்துங் குணத்தாய் போற்றி
கையானை மெய்த்தோல் உரித்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி! 8

செய்ய மலர்மேலான் கண்ணன் போற்றித்
தேடி யுணராமை நின்றாய் போற்றி
பொய்யா நஞ்சுண்ட பொறையே போற்றி
பொருளாக என்னை ஆட் கொண்டாய் போற்றி
மெய்யாக ஆனஞ் சுகந்தாய் போற்றி
மிக்கார்க ளேத்துங் குணத்தாய் போற்றி
கையானை மெய்த்தோல் உரித்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி! 9

மேல்வைத்த வானோர் பெருமான் போற்றி
மேலாடு புரமூன்றும் எய்தாய் போற்றி
சீலத்தான் தென்னிலங்கை மன்னன் போற்றிச்
சிலையெடுக்க வாயலற வைத்தாய் போற்றி
கோலத்தாற் குறைவில்லான் தன்னை யன்று
கொடிதாகக் காய்ந்த குழகா போற்றி
காலத்தாற் காலனையுங் காய்ந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி! 10

அப்பர் திருமுறை 6

பாட்டான நல்ல தொடையாய் போற்றி
பரிசை அறியாமை நின்றாய் போற்றி
சூட்டான திங்கள் முடியாய் போற்றி
தூமாலை மத்தம் அணிந்தாய் போற்றி

ஆட்டான தஞ்சும் அமர்ந்தாய் போற்றி
அடங்கார் புரமெரிய நக்காய் போற்றி
காட்டானை மெய்த்தோலுரித்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி! 1

அதிரா வினைகள் அறுப்பாய் போற்றி
ஆல நிழற்கீழ் அமர்ந்தாய் போற்றி
சதுரா சதுரக் குழையாய் போற்றி
சாம்பர் மெய்பூசுந் தலைவா போற்றி
எதிரா உலகம் அமைப்பாய் போற்றி
என்றும் மீளாவருள் செய்வாய் போற்றி
கதிரார் கதிருக்கோர் கண்ணே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 2

செய்யாய் கரியாய் வெளியாய் போற்றி
செல்லாத செல்வம் உடையாய் போற்றி
ஐயாய் பெரியாய் சிறியாய் போற்றி
ஆகாய வண்ணம் உடையாய் போற்றி
வெய்யாய் தணியாய் அணியாய் போற்றி
வேளாத வேள்வி யுடையாய் போற்றி
கையார் தழலார் விடங்கா போற்றி
கயிலை மலையானே போற்றி 3

ஆட்சி உலகை உடையாய் போற்றி
அடியார்க் கமுதெலாம் ஈவாய் போற்றி
சூட்சி சிறிதும் இலாதாய் போற்றி
சூழ்ந்த கடல் நஞ்சு உண்டாய் போற்றி
மாட்சி பெரிதும் உடையாய் போற்றி
மன்னியென் சிந்தை மகிழ்ந்தாய் போற்றி

காட்சி பெரிதும் அரியாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 4

முன்னியாய் நின்ற முதல்வா போற்றி
மூவாத மேனி யுடையாய் போற்றி
என்னியா எந்தை பிரானே போற்றி
ஏழின் இசையே உகப்பாய் போற்றி
மன்னிய மங்கை மணாளா போற்றி
மந்திரமுந் தந்திரமும் ஆனாய் போற்றி
கன்னியார் கங்கைத் தலைவா போற்றி
கயிலை மலையாலே போற்றி போற்றி 5

உரியாய் உலகினுக் கெல்லாம் போற்றி
உணர்வென்னும் ஊர்வ துடையாய் போற்றி
எரியாய் தெய்வச் சுடரே போற்றி
ஏசுமா முண்டி யுடையாய் போற்றி
அரியாய் அமரர்கட் கெல்லாம் போற்றி
அறிவே அடக்கம் உடையாய் போற்றி
கரியானுக் காழியன் றீந்தாய் போற்றி
கயிலை மலையாலே போற்றி போற்றி 6

எண்மேலும் எண்ணம் உடையாய் போற்றி
ஏறரிய ஏறுங்க குணத்தாய் போற்றி
பண்மேலே பாவித் தருந்தாய் போற்றி
பண்ணொ டியாழ்வீணை பயின்றாய் போறறி
விண்மேலும் மேலும் நிமிர்ந்தாய் போற்றி
மேலார்கண் மேலார்கண் மேலாய் போற்றி
கண்மேலுங் கண்ணொன் றுடையாய் போற்றி
கயிலை மலையாளே போற்றி போற்றி 7

முடியார் சடையின் மதியாய் போற்றி
முழுநீறு சண்ணித்த மூர்த்தி போற்றி
துடியா ரிடையுமையாள் பங்கா போற்றி
சோதித்தார் காணாமை நின்றாய் போற்றி
அடியார் அடிமை அறிவாய் போற்றி
அமரர் பதியாள வைத்தாய் போற்றி
கடியார் புரமூன்றும் எய்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி! 8

போற்றிசைத்துன் அடிபரவ நின்றாய் போற்றி
புண்ணியனே நண்ணல் அரியாய் போற்றி
ஏற்றிசைக்கும் வான்மேல் இருந்தாய் போற்றி
எண்ணா யிரநூறு பெயராய் போற்றி
நாற்றிசைக்கும் விளக்காய நாதா போற்றி
நான்முகற்கும் மாற்கும் அரியாய் போற்றி
காற்றிசைக்கும் திசைக்கெல்லாம் வித்தே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி! 9

உ

திருச்சிற்றம்பலம்

சிவபுராணம்

தொல்லையிரும் பிறவி சூழுந்தளை நீக்கி
அல்ல லறுத்தானந்தம் ஆக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னுந் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமனிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க
ஈசன்அடி போற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி

சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அநின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினஎல்லாம் போயகல வந்தருளி
மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவு இறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே

மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட முடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழு அழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதிமலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன்ஆர் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே

கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தம் கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய் சொல்லாத நுண் உணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என்சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனேஓ என்று என்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓஎன்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

சிவபுராணம் முற்றிற்று

அத்துவிதப் பொருள் காப்பாம்

திருச்சிற்றம்பலம்

அத்துவி தப்பொருள் காப்பாம் - எனக்
கடியார்க ளென்றென்றுங் காப்பாம்
சித்தருந் தேவருங் காப்பாம் - என்றன்
சித்தத் திலங்குந் திருவருள் காப்பாம் (அத்து)1

அட்ட வசுக்களுங் காப்பாம் - எனக்
கானந்த மான பராபரன் காப்பாம்
எட்டுத் திசைகளுங் காப்பாம் - எனக்
கெங்கும் நிறைந்த சிவசக்தி காப்பாம் (அத்து)2

பிராண னபானனுங் காப்பாம் - என்னைப்
பிரியா திருக்கும் பிரணவங் காப்பாம்
அராவணி வேணியன் காப்பாம் - எனக்
கருளை யளிக்குங் குருபரன் காப்பாம் (அத்து)3

பஞ்சப் புலன்களுங் காப்பாம் - என்னைப்
பரவு மடியவ ரனுதினங் காப்பாம்
குஞ்சர முகத்தவன் காப்பாம் - நல்ல
குழந்தை வடிவேலன் என்றென்றுங் காப்பாம். (அத்து)4

சந்திர சூரியர் காப்பாம் - எங்குந்
தங்கு முயிர்க ளனைத்துமென் காப்பாம்
மந்திரந் தந்திரங் காப்பாம் - நான்கு
மறைகள் சிவாகமம் மாநிலங் காப்பாம் (அத்து)5

நன்றி நவிலல் ....

எண்ணமும் நினைவும் மாசி
எமையீன்று அன்பா லூட்டி
வண்ணமும் கருணை சேர்ந்த
வாய்மையும் நிறைந்த தாய்மை
நண்ணவும் நோயா லுடலின்
நாடியும் தளர்ந்து போக
எண்ணவும் மடியாக் காலை
எய்தினள் எளிதில் நீத்தே
மனத்தறு துயரில் கலந்து
மாசறு தெளிவு காணக்
கனத்தநீர் உதிர்த்து நின்று
கணம் தனில் உதவி நின்றோர்
காட்டிய பரிவினோடு
காசியக் கடமை யீற்றாய்
நீட்டிய நிறைவுக் கரத்தை
நெஞ்சத்தால் நினைவிற் கொண்டோம்
உற்றவர் உறவி லுள்ளோர்
உறுதுணை யாக நின்றோர்
மற்றுவாய் மொழியில் துயரை
மறந்திடத் தேறல் தந்தோர்
இற்றைநாள் வரையா யிருந்து
எமக்குர மூட்டி நின்றோர்
அத்தனை பேர்க்கும் நன்றி
நவில்கின்றோம் கரங்கள் கூப்பி.

நன்றி

நயினாதீவு - 07
18/4, சீனியர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்,
சின்னத்தம்பி முத்தையா
குடும்பத்தினர்.
(கணக்காளர்,
ஈஸ்வரபகவான் கம்பனி)



நாம் கடவுளை உள்ளத்தில் வளர்க்கின்றோம்
நாம் அவருடைய தாய்
நமக்கு மவருக்கும்மொரு குறைவுமில்லை
நம்மை அவர் பிரிய முடியாது
முழுவதும் உண்மை
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!